1994 ஜனவரி 5]

(ஆ) ஆம் எனில், இதனைத் தடுக்க அரசு என்ன நடவடிக்கை எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர்:

(அ) குடிநீர், கழிவுநீர் இவைகள் தனியாக கழிவுநீர், குடிநீர் வடிகால்வாரியம் என்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதில் ஏற்படும் குறைகளை அவர்களே நிவர்த்திச் செய்கிறார்கள்.

(ஆ) காலரா, மஞ்சள்காமாலை பாதித்தவர்களை அதற்கென்று தனியாக உள்ள தொற்றுநோய் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு அதிக தனி கவனம் செலுத்திப் பராமரிக்கப்படுகிறது. மேலும், வாரியத்தின் ஒத்துழைப்புடன் எங்கெங்கு குளோரின் கலக்காமல் உள்ளதோ, இந்த இடங்களை கண்டறிந்து கூட்டாக குளோரின் நீரில் கலக்கப்படுகிறது. சென்னை மாநகராட்சியும் அவர்களுக்கு அடிக்கடி தொலைபேசி மூலமாகவும், கடிதம் மூலமாகவும் குறைபாடுகள் உள்ள இடங்களை சுட்டிக்காட்டி அவர்களே நிவர்த்தி செய்துவிடுகிறார்கள்.

165--

மானூர் ஒன்றியம் வடகரையில் மின் அழுத்தத்தைக் கூட்ட புதிய டிரான்ஸ்பார்மர் அமைத்தல்.

**15123-திரு. எஸ்.எஸ். ராமசுப்பு:*

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) நெல்லை-கட்டபொம்மன் மாவட்டம், ஆலங்குளம் தொகுதி, மானூர் ஒன்றியம் வடகரை கிராமத்தில் மின் அழுத்தம் குறைவாக இருப்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், மின் அழுத்தத்தைக் கூட்ட புதிய டிரான்ஸ்பார்மர் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்:

(அ) மானூர் ஒன்றியம், வடகரை கிராமத்தில் மின் அழுத்த குறைபாடுகள் ஏதும் தற்போது இல்லை.

(ஆ) எழவில்லை.

166--

திருப்பாதிரிப்புலியூரில் இரயில்வே மேம்பாலம் அமைத்தல்.

**19822-திரு. பி.ஆர்.எஸ். வெங்கடேசன்:*

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

[திரு. பி.ஆர்.எஸ். வெங்கடேசன்] [1994 ஜனவரி 5

(அ) திருப்பாதிரிப்புலியூரில் இரயில்வே மேம்பாலம் அமைக்கும் திட்டத்தின் தற்போதைய நிலை என்ன?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பாலம் கட்டப்படும்?

மாண்புமிகு எஸ். கண்ணப்பன், பொதுப்பணித் துறை அமைச்சர்:

(அ) மற்றும் (ஆ): திருப்பாதிரிப்புலியூர் இரயில்வே மேம்பாலம் கட்டும் பணி இரயில்வே மற்றும் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித்துறை இணைந்து செலவு பங்கீட்டு (Cost sharing) முறையில் எடுத்துக்கொள்ள வேண்டும். இப்பணி 1994-95-ம் ஆண்டு இரயில்வே பணித் திட்டத்திற்கு மாநில அரசால் தென்னக இரயில்வேக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இரயில்வேயில் அங்கீகரிக்கப்பட்டால் மேற்படி பாலம் கட்டும் பணி செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும்.

[குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகள் குறித்து கவன ஈர்ப்பு.

3. தகவல் கோரல்

உறுப்பினர் கொடுத்துள்ள அறிவிக்கை குறித்து.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கொடுத்து இருக்கிறீர்கள். (குறுக்கீடு) பிரச்சினையை 9.27-க்குக் கொடுத்தீர்கள். அரசாங்கத்திடமிருந்து இந்தப் பிரச்சினையில் எனக்குத் தகவல் வரவில்லை. (குறுக்கீடு) வேறு பிரச்சினையாக இருந்தால் உங்களை எழுப்பச் சொல்லுவேன். நீங்கள் எழுப்பியிருக்கிற பிரச்சினை ஜாதித் தகராறு சம்பந்தப்பட்ட பிரச்சினை. அதுபற்றிய முழுத் தகவல் (குறுக்கீடு) நான் சொல்வதைக் கேளுங்கள், முழுத் தகவல் வராமல் நீங்கள் பிரச்சினையை எழுப்புவதும் அல்லது அதற்கு அரசாங்கம் தற்போது கிடைத்திருக்கிற தகவல் அடிப்படையில் மட்டும் பதில் சொல்வதும் என்றால், அதனாலேகூட வேறு சில பிரச்சினைகள் வரக்கூடும். (குறுக்கீடு)

திரு. ஜி. பழனிசாமி: நான், காவல்துறை தலையிட வேண்டும் என்று கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் கேட்பது சரி. அதுபற்றிய முழுத் தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்குமேயானால், முழுத்